1967 ஜுன் 22]

When a sufficient or reasonable number of supplementary questions have already been put, the Speaker may disallow any further supplementary questions.

திரு. முனுசாமி அவர்கள் 33 (2) விதியை படித்துப் பார்க்கும் படி கேட்டுக்கொள்கிறேன். போதுமான அளவுக்குத் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டுவிட்டால் மேற்கொண்டு துணைக் கேள்விகள் அனுமதிக்க முடியாது என்று சொல்லலாம் என்று இருக்கிறது. ஆகவே துணைக்கேள்விகள் போதுமான அளவு அனுமதிக்கப்பட்டு விட்டதால், மேற்கொண்டு துணைக்கேள்விகள் அனுமதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அலுமினியம்

*45 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் எந்த அளவு எந்தெந்த இடத்தில் அலுமினியம் எடுக்கப்பட்டுள்ளது?

(இ) சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அலுமினியம், 'பாக்சைட்' கனிகளிலிருந்து எடுக்கப்படுகிறது. 'பாக்சைட்' கனிகள் சேலம் மாவட்டம், சேர்வராயன் மலையிலும், கொல்லி மலையிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பழநி மலையிலும், நீலகிரியிலும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தனியார் துறை நிறுவனமான சென்னை அலுமினியம் கம்பெனி லிமிடெட் 1965, மே திங்களிலிருந்து அலுமினியம் தயாரிக்கத் தொடங்கியது. இந்த நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் அளவுள்ள அலுமினியம் தயாரிக்கும் திறனுடையது.

Dr. H. V. HANDE : In view of the fact that the Government has a number of shares in most of these aluminium companies, will the Government exercise any control over their profit and loss and will it investigate whether these companies are running at a profit or loss?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரத்திற்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : அலுமினியத் தொழிற்சாலை மேட்டூரில் இருக்கிறது. அதனுடைய நிர்வாகம், பணப்பொறுப்பு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்வி எவ்வளவு கிடைக்கிறது, யார் எடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றியது, மற்றத் தகவல்களுக்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்த அலுமினியத் தொழிற்சாலை முதலிலே பொதுத்துறையிலே ஆரம்பிக்கப்படுவதாக இருந்தும், தனியார் துறையில் இயங்குவதற்கான காரணங்கள் யாவை என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்: மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையில் ஒரு ஆண்டில் ஒரு கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி ஒரு கோடி ரூபாய் லாபம் வரக்கூடிய தொழிற்சாலையை அரசாங்கம் நடத்தாமல் தனியார் துறை ஏன் நடத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரம் இல்லை, தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRU K. VINAYAKAM : Tiruttani area has come from the Andhra Pradesh. There is a feeling that a lot of mineral deposits are found in that area. Was any action taken to conduct a geological survey in that area?

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member should be aware of the fact that since the area was in the Andhra Pradesh, geological survey could not have been taken up by the Madras Government.

THIRU K. VINAYAKAM : I would like to clear a misapprehension. This area came into our State in 1960 and this question relates to the period 1960–66.

THE HON. THIRU C. N. ANNADURAI : My Friend would admit that it would have been more appropriate if the question had been addressed to the previous Government.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஜியலாஜிக்கல் சர்வே அகில இந்தியாவினுடைய சர்வே, என்று இருந்தாலும் இந்த மாநிலத்திலோ அல்லது அந்த மாநிலத்திலோ எந்த மாநிலமாக இருந்தாலும் சரி மத்திய சர்க்கார் மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்றாலும் அதைச் செய்வதற்காக இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதுபோல் மத்திய சர்க்கார்தான் இதற்கு அதிகாரம் பெற்றவர்கள் என்பது உண்மையென்றாலும், என்ன என்ன ஆராய்ச்சி நடத்தலாம் என்று கூறுகின்ற உரிமை மாநில சர்க்காருக்குத்தான் இருக்கிறது. இதற்கு இந்தச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதற்கு முதலில் இருந்த சர்க்கார், இதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய சர்க்கார், இதைப்பற்றி நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

DR. H. V. HANDE : Are the Government aware of the fact that there is a great deal of discrepancy between the aluminium factory price in the Madras State and the world aluminium price and the price of the aluminium that comes out of the local factory is much higher than the world prices? If so, will the Government examine this matter and take necessary action to see that the price descrepancy is not much between the Madras aluminium price and the world price? . .

THE HON. THIRU. C. N. ANNADURAI : The points referred to by the hon. Member will be taken into account; but, at present I am not posted with all the necessary facts about the working of the Aluminium factory at Mettur.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, நீலகிரியிலே எவ்வளவு பாக்ஸைட் கிடைக்கும் என்பதை அமைச்சரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதிகமாகக் கிடைக்குமானால் அங்கு ஒரு அலுமினியம் உற்பத்தி தொழிற்சாலையை ஏற்படுத்தும் சாத்தியக்கூறு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலையிலும், கொல்லி மலையிலும் பாக்ஸைட் கனி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அது எடுக்கப்படுகிறது. நீலகிரியிலும் பழனி மலையிலும் இந்தக் கனிப் பொருள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு வல்லுநர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கனிப்பொருள் இருக்கும் என்று தெரிந்த பிறகு வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

***46. வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்** : மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் அலுமினியம் உருக்குந் தொழிற்சாலையை ஏற்படுத்தும் நோக்கம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆண்டு ஒன்றிற்கு 25,000 மெட்ரிக் டன் அலுமினிய பாளங்களும், 10,500 மெட்ரிக் டன் அலுமினிய வார்ப்படமும் தயாரிப்பதற்கான தொழில் நிறுவனம் ஒன்றைச் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூரில் அமைப்பதற்கான உரிமம் சென்னை அலுமினியம் கம்பெனிக்கு வழங்கப்பட்டுள்ளது. அலுமினிய வார்ப்படங்களின் உற்பத்தித் திறனை ஆண்டொன்றிற்கு 15,000 டன்களாக அதிகரிக்க அனுமதிக் கடிதம் ஒன்றும் இக் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. வேறு தொழில் யூனிட்டுகள் எவற்றையும் நிறுவும் செயற்குறிப்பு இல்லை.

DR. H. V. HANDA : Sir what is the working capacity and also the installed capacity of that factory? What is it exactly that